**பெருநகர சென்னை மாநகராட்சி**

**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 40** **நாள்: 12.04.2024**

**நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024னை முன்னிட்டு, பொதுமக்களுக்கு 100% வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், மாவட்ட தேர்தல் அலுவலர் / கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் இன்று பாரா செயிலிங் மூலம் விழிப்புணர்வினை ஏற்படுத்தினார்.**

நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024னை முன்னிட்டு, 100% வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (12.04.2024) திருவான்மியூர் கடற்கரையில் நடைபெற்ற தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பாரா செய்லிங் (Para Sailing) மூலம் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்று விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளுடன் வண்ண பலூன்களை விண்ணில் பறக்கவிட்டு, பாரா செய்லிங் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தினார்.

பின்னர், ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் சென்னை மாவட்டத்தில் உள்ள 3 நாடாளுமன்றத் தொகுதிகளுகளில் உள்ள வாக்குப்பதிவு மையங்களில் பணிபுரியவுள்ள தேர்தல் நுண் பார்வையாளர்களுக்கான பயிற்சி வகுப்பினைத் தொடங்கி வைத்து, அலுவலர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகளிடம் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை உடைய இந்திய குடிமக்களாகிய நாங்கள் 100% வாக்களிப்போம் என்ற விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தின் நடமாடும் வாகனத்தினை ரிப்பன் கட்டட வளாகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வுகளில் தேர்தல் பொது பார்வையாளர் (சென்னை வடக்கு) திரு. கார்த்திகே தன்ஜி புத்தப்பாட்டி, இ.ஆ.ப., (Mr.Kartikay Dhanji Budhdhabhatti, I.A.S.,), டாக்டர் டி. சுரேஷ், இ.ஆ.ப., (Dr.D. Suresh, I.A.S.,), திரு. முத்தாடா ரவிச்சந்திரா, இ.ஆ.ப., (Thiru. Muddada Ravichandra, I.A.S.,), கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் திருமதி ஆர். லலிதா, இ.ஆ.ப., (கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி)), திருமதி ஷரண்யா அறி, இ.ஆ.ப., (துணை ஆணையாளர் (கல்வி)), தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/வட்டார துணை ஆணையாளர்கள் திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., (சென்னை தெற்கு), திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., (சென்னை மத்தியம்), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (சென்னை வடக்கு), மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்கள் திரு.சீ.குமார், திரு.கதிர்வேலு மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**